முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 15.04.2026 அ.வ.எண்.295/2018 வா.சா.1. செல்வி, க/பெ. சந்திரசேகர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் சந்திரசேகர் இறப்பிற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 3 ம் பிரதிவாதி சாந்தியை எதற்காக கட்சி சேர்த்துள்ளேன் என்றால் எனது கணவரை அவர் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதாக கிராம நிர்வாக அலுவலரிடம் சொன்னார் அதற்காக அவரை கட்சி சேர்த்துள்ளேன். மேற்படி விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது கணவருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு மனு தாக்கல் செய்த போது கூறினார்கள். வா சா ஆ 5 ல் சாந்தி 2 வது மனைவி என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.எனக்கும் இறந்துபோன சந்திரசேகருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்ற விவரத்தை எனது வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கும் சந்திரசேகருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதை காண்பிக்க எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.